இருக்கும். செங்கல்பட்டிற்குப் பக்கத்திலேயும், அதே போல் மாமண்டூரின் சாலையோர வலது பக்கத்திலே இருக்கக் கூடிய சில தனியார்களுடைய உணவு விடுதிக்கு முன்னால் இரவு 9 மணி, 10 மணிக்கு அந்தப் பேருந்துகளை அங்கே நிறுத்தி, செல்லக்கூடிய பயணிகள் வேறு எங்குமே செல்ல முடியாது, நடுக்காட்டிற்குள்ளே இருக்கின்ற மாதிரி ஒரு அமைப்பு. ஆகவே, அவர்கள் கொடுக்கின்ற உணவைத் தான் சாப்பிட்டுத் தீர வேண்டும். போடுகின்ற பில்லுக் குண்டான பணத்தைக் கொடுக்க வேண்டும் என்ற ஒரு நிர்ப்பந்தம் ஏற்பட்டதற்குப் பின்னாலே தான் அரசு இத்தகைய மோசமான நிலைமையை உணர்ந்து பெரியார் போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் ஒரு நல்ல, தமிழ் நாட்டிற்கே எடுத்துக் காட்டாக இருக்கின்ற வகையில் ஒரு அருமையான சிற்றுண்டி விடுதியை, மோட்டலை உருவாக்கி இன்றைய தினம் அது சிறப்பான முறையிலே பணியாற்றி வருகின்றது. தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் நீண்ட தூரப் பயணிகளுக்கு வசதி ஏற்படுத்துகின்ற வகையில் மேலும் எங்கெங்கு இத்தகைய விடுதிகள் அமைக்க வேண்டும் என்பதை ஆராய்ந்து அந்தந்தப் போக்குவரத்துக் கழகங்கள் உருவாக்கி நடத்துவதற்கான திட்டத்தை அரசு பரிசீலனை செய்யும்.

முறைசாராக் கல்வித் திட்டம்.

*5215—திரு. ப. முத்துச்சாமி: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

இதுவரை இயங்கி வரும் முறை சாராக் கல்வித் திட்டத்தில் கல்வி கற்றுத் தரப்படுகிறதா என்பதைக் கண்காணிக்க ஒன்றிய அளவில் பொதுத் தேர்வு வைத்து சரியாகக் கற்றுக் கொடுக்காதவர்களைக் கண்டறிந்து உடன் நீக்கி வேறொருவரை நியமித்து ஒழுங்குபடுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே, வயது வந்தோர் கல்வித் திட்டத்தின் கீழ் சரியாகக் கற்றுத் தராத ஊக்குநர்கள் அவ்வப்போது நீக்கப்பட்டு புதிதாக நல்ல ஊக்குநர்கள் நியமிக்கப்பட்டு, போதனா முறை ஒழுங்குபடுத்தப்படுகிறது. பொதுத் தேர்வு, ஒன்றிய அளவில் ஏற்பாடு செய்தால் இந்த வயது வந்தோர் கல்வித் திட்டத்தில் கற்போர்கள் தேர்வு எழுத அச்சப்பட்டு கல்வி கற்பதையே விட்டு விடக்கூடும் என்று இந்தத் துறை கருதுகிறது.

1990 ஆகஸ்ட் 23]

திரு. ப. முத்துசாமி : தலைவரவர்களே, இந்த வயது வந்தோர் கல்வித் திட்டத்தின் கீழ் பல இடங்களில் ஏதோ பெயருக்காக—சம்பளம், குறைந்தபட்சச் சம்பளம் என்றாலும் கூட, அந்தச் சலுகையை மாத்திரம் அனுபவித்து விட்டு, முறையாகக் கற்றுத் தராமல் இந்தத் திட்டத்தினுடைய நோக்கம் வெற்றி பெற முடியாமல் இருக்கிறது. ஆகையினாலே தான் முடிந்த அளவுக்கு ஆங்காங்கே இருக்கின்ற ஒன்றிய அளவில் மேல் கல்வி அலுவலர்களை அனுப்பி, 'ரிட்டன்' எழுத்து மூலமான பயிற்சி இல்லாவிட்டாலும் கூட அவர்கள் நேரடியாகக் கேட்கக் கூடிய சில கேள்விகளுக்காவது பதில் அளித்து முறையாக நடக்கிறதா என்று அரசு கண்காணித்தால் இந்தத் திட்டம் வெற்றி பெற வாய்ப்பிருக்கும். அதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்குமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவரவர்களே, இந்த வயது வந்தோர் கல்வித் திட்டம், கிடைக்கின்ற ஊக்குநர்களுடைய ஊக்கத்தைப் பொறுத்துதான் சிறப்பு அடைய முடியும். இந்த ஊக்குநர்களுக்கு மேல்களப் பணியாளர்கள் அவர்களை மேற்பார்வை செய்வதற்காக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் 3 மாதம், 4 மாதத்திற்கு ஒரு முறை அங்கே நடைபெறுகிற பயிற்சியை மதிப்பீடு செய்கிறார்கள். அந்த மதிப்பீடும்கூட ஒப்புக்குச் செயல்படுகிற மதிப்பீடாகத்தான் இருக்க முடியும் ஏனென்றால் ஆங்காங்கே உள்ள அறியாத நிலையிலே உள்ள மக்கள் எவ்வளவு ஆர்வம் காட்டுகிறார்களோ, எந்த அளவுக்கு அவர்களுக்கு அதிலே ஒரு நாட்டம் ஏற்படுகிறதோ, அதைப் பொறுத்துதான் இந்த இயக்கம் வெற்றி அடைய முடியும். ஆனால் அதற்காக நியமிக்கப்பட்டவர்கள் தங்களுடைய கடமைகளைச் செய்வதற்கு தொடர்ந்து இந்தத் துறையைச் சேர்ந்த அலுவலர்கள் முயற்சி எடுத்துக்கொள்வார்கள்.

திரு. ப. முத்துசாமி : தலைவரவர்களே, இதுபோன்று மேற்பார்வை செய்கின்ற களப் பணியாளர்கள் முறையாக அவ்வப்போது அங்கு ஆய்வு செய்வதில் தடங்கல் ஏற்படுமானால் அதை விரைவுபடுத்தியாவது இந்தத் திட்டம் செம்மையாக நடைபெறுவதற்கு அரசு முயற்சி எடுத்துக் கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவரவர்களே, கடந்த சில மாதங்களாக அந்த ஊக்குநர்கள் தொடர்ந்து பணியாற்றுகிற நிலைமை தடைபட்டு இருக்கிறது. கிராம நலப் பணியாளர்கள் மூலமாக இந்தப் பணியை நிறைவேற்றுவதாகத் திட்டமிடப்பட்டு கிராம நலப் பணியாளர்களுக்கு இந்த வயது வந்தோர் கல்விப் பணிகளையும் நிறைவேற்றுவதற்கான பயிற்சி வழங்கிட அதற்கு ஏறத்தாழ ஒரு வாரம் அல்லது 10 நாட்கள் தகுந்த முறையிலே

அவர்களுக்கு அறிவுறுத்தல் நிகழ்த்தப்பட்டிருக்கிறது. இனி எதிர் காலத்தில் இது மேலும் செம்மைப்படும் என்று எதிர்பார்க்கலாம்.

ஆசிரியர்களுக்கு ஈட்டிய விடுப்பு.

*9336—திரு. எஸ். சிவலோகம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ?

அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படுவது போல, ஈட்டிய விடுப்பு ஆசிரியர்களுக்கும் அதே விகிதத்தில் வழங்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவரவர்களே இந்தக் கோரிக்கையினை ஏற்பதற்கு வாய்ப்பில்லை.

9–15 மணி

திரு. எஸ். சிவலோகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஊழியர்களுக்கு ஈட்டிய விடுப்பு கொடுப்பது போல, ஆசிரியர்களுக்கும் கிடைக்க மறுபரிசீலனை செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. அரசு ஊழியர்களைப்போல அத்தனை நாட்களிலும், வேலைசெய்வதற்கு ஆசிரியர்கள் முன்வந்தால், அதேமுறை அவர்களுக்கும் கையாளப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

பட்ட மேற்படிப்பு வகுப்பு துவங்குதல்.

*9656 திரு. ச. அழகுவேலு : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ;

(அ) விழுப்புரம் அரசினர் கலைக் கல்லூரியில் பட்ட மேற்படிப்பு வகுப்பு துவங்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது துவங்கப்படும் ?